**சுருக்கம்**

பள்ளிக்கல்வி - அறிவிப்புகள் – மாண்புமிகுமுதலமைச்சர்அவர்களின் 01.03.2023 அன்றைய செய்திவெளியீட்டு அறிவிப்பு - "அனைத்து ஆசிரியர்களுக்கும் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை முழு உடல் பரிசோதனை செய்யப்படும்."என்பதனை செயல்படுத்துவதற்கு அனுமதிவழங்கி ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித்[பக5(1)]துறை.

**அரசாணை (நிலை) எண். 41** **நாள் 13.02.2024**

**திருவள்ளுவராண்டு 2055,**

**சோபகிருதுவருடம், மாசி 1**

படிக்கப்பட்டவை

1. இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை அவர்களின் செய்தி வெளியீடு எண்.408, நாள்01.03.2023.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண். 017510/சி3/இ1/ 2023 நாள் 19.06.2023

*************

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட 01.03.2023 நாளிட்ட செய்தி வெளியிட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏனையவற்றோடு கீழ்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள்.

> "மாணவர் வாழ்க்கை ஏற்றம்காண, அயராத உழைக்கும் ஆசிரியப் பெருமக்களின் உடல்நலம் காக்க, அனைத்து ஆசிரியர்களுக்கும் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை முழு உடல் பரிசோதனை செய்யப்படும்."

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்துவதற்கு ஏதுவாக, பள்ளிக்கல்விஇயக்குநர், தமதுகடிதத்தில், பின்வரும் விவரங்களைத் தெரிவித்துள்ளார்:-

பள்ளிக் கல்வி துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் துவக்கப்பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளின் எண்ணிக்கை 37588 ஆகும்.

இப்பள்ளிகளில் பணிபுரியும் அனைத்துவகை ஆசிரியர்களின் வயது அடிப்படையான எண்ணிக்கை பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

i) 50 வயதிற்கு மேல் பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை : 106985

ii) 40 – 50 வயதிற்குள் பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை : 73349

iii) 40 வயதிற்கு கீழ் பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை : 43701

3. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து பின்வருமாறு ஆணையிடுகிறது.

(i) பள்ளிக் கல்வித் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் பள்ளிகளில் பணிபுரியும் 50 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை 106985 ஆகும். இவ்வாசிரியர்களுக்கு மட்டும் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை முழுஉடல் பரிசோதனை முதற்கட்டமாக மேற்கொள்ள அனுமதி.

(ii) மேற்படி 50 வயதுக்குமேற்பட்ட ஆசிரியர்களுக்கு Gold திட்டத்தில் வகைபடுத்தப்பட்டுள்ள பின்வரும் பரிசோதனைகளை மேற்கொள்ள அனுமதி.

I. Gold – Rs.1000/-

1. Complete Haemogram
2. ESR, Urine Analysis
3. Blood Sugar F & PP
4. Urea, Creatinine, Uric Acid
5. LIPID Profiles
6. Total Cholesterol (HDL and LDL)
7. Triglycerides, Total Cholesterol / HDL ratio
8. LIVER Function Test
9. Serum Bilirubin (total & direct)
10. AST, ALT, SAP,Total Protein & Albumin
11. HbsAg
12. Blood Grouping & Typing
13. ECG
14. X-Ray Chest
15. USG Abdomen
16. Pap Smear

(iii) 50 வயதுக்கு மேற்பட்ட அனைத்து வகை ஆசிரியர்களில் 106985 ல் மூன்றாக பிரித்து ஆண்டு ஒன்றிற்கு சுமார் 35600 ஆசிரியர்களுக்கு முழுஉடல் பரிசோதனை மேற்கொள்ள அனுமதி.

(iv) மேற்படி 35600 ஆசிரியர்களுக்கு Gold திட்டத்தின்கீழ் ஒரு ஆசிரியருக்கு ரூ.1000 வீதம் (35600 x 1000) = 3,56,00,000/- மட்டும் தேசிய ஆசிரியர் நலநிதியிலிருந்து இச்செலவினத்தைமேற்கொள்ள அனுமதி.

(v) ஒவ்வொரு ஆண்டும் இத்தொகையை தேசிய ஆசிரியர் நலநிதியிலிருந்து கேட்டுப்பெற்றுக் கொள்ள பள்ளிக்கல்வி இயக்குநருக்கு அனுமதி.

8. இவ்வாரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 2410/கல்வி-2 / 2024, நாள் 04.02.2024 இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது

//ஆளுநரின் ஆணைப்படி//

ஜெ. குமரகுருபரன்
அரசு செயலாளர்.

பெறுநர்
பள்ளிகல்வி இயக்குநர், சென்னை -6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை -6.
மாநில கணக்காயர், சென்னை-18/35,
சம்மந்தப்பட்ட சம்பளகணக்கு அலுவலர்கள்,
சம்மந்தப்பட்ட மாவட்டக் கருவூல கணக்கு அலுவலர்கள்.

நகல்:
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, சென்னை-9
இயக்குநர், மருத்துவம் மற்றும் மருத்துவக்கல்வி இயக்ககம், சென்னை- 10
மாண்புமிகு பள்ளிக்கல்வி அமைச்சர் அலுவலகம், சென்னை-9.
நிதித்துறை (கல்வி-II/வ.செ.பொ.2/வ.வ.I), சென்னை-9,
செயலாளரின் தனிச்செயலாளர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வித் (வரவு செலவு ) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13/2/24
அரசு சார்புச் செயலாளர்